www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

# மயிலாடுதுறை மாவட்டம்

## மூன்றாம் திருப்புதல் தேர்வு - 2023

12th Standard

**கணக்குப்பதிவியல்** Reg.No. : [ ][ ][ ][ ][ ][ ]

Exam Time : 03:00:00 Hrs

Total Marks : 90

## பகுதி - I

20 x 1 = 20

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1) வருவாய் மற்றும் செலவினக் கணக்கு தயாரிக்கப்படுவதன் மூலம் கண்டறியப்படுவது.

(a) இலாபம் அல்லது நட்டம் (b) ரொக்கம் மற்றும் வங்கி இருப்பு
(c) உபரி அல்லது பற்றாக்குறை (d) நிதிநிலை

2) நிலை அறிக்கை பொதுவாக வியாபாரத்தின் _______ கண்டறிய தயாரிக்கப்படுகிறது.

(a) முதலை (b) நிதிநிலையை (c) இலாபத்தை (d) நட்டத்தை

3) ஒரு தொழில் உரிமையாளரின் மொத்தச் சொத்துக்கள் ரூ.5,00,000; அவருடைய பொறுப்புகள் ரூ.3,50,000; அவருடைய முதல் _____ ஆகும்.

(a) ரூ.1,50,000 (b) ரூ.8,50,000 (c) ரூ.3,50,000 (d) ரூ.2,50,000

4) கூட்டாளிகளிடமிருந்து நிறுவனம் கடன்கள் பெற்றிருந்தால், அக்கடன்களுக்கு இந்திய கூட்டாண்மைச் சட்டம், 1932 –ன் படி வழங்கப்படும் வட்டி வீதம்

(a) ஆண்டுக்கு 8% (b) ஆண்டுக்கு 12% (c) ஆண்டுக்கு 5% (d) ஆண்டுக்கு 6%

5) ஒரே வகை நிறுவனங்களின் சராசரி இலாபவிகிதமாக கருதப்படுவது

(a) சராசரி இலாபம் (b) சாதாரண இலாப விகிதம் (c) எதிர்நோக்கும் இலாப விகிதம்
(d) இவைகளில் ஏதுமில்லை

6) சராசரி இலாபம் ரூ.25,000 மற்றும் சாதாரண இலாபம் ரூ.15,000 ஆக இருக்கும் போது, உயர் இலாபம்

(a) ரூ.25,000 (b) ரூ.5,000 (c) ரூ.10,000 (d) ரூ.15,000

7) சராசரி இலாபம் ரூ.50,000 மற்றும் சாதாரண இலாபம் ரூ.30,000 ஆக இருக்கும் பொது, உயர் இலாபம்

(a) ரூ.50,000 (b) ரூ.10,000 (c) ரூ.20,000 (d) ரூ.30,000

8) பட்டியல் I ஐ மற்றும் பட்டியல் II உடன் ஒப்பீடு செய்து சரியான விடையை கீழே கொடுக்கப்பட்டுள்ள சரியான குறியீட்டை பயன்படுத்தி தெரிவு செய்யவும்.

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| (i) தியாக விகிதம் | 1. முதலீட்டு மாறுபடும் நிதி |
| (ii) பழைய இலாபப் பகிர்வு விகிதம் | 2. பகிர்ந்துதரா இல |
| (iii) மறுமதிப்பீட்டு கணக்கு | 3. நற்பெயர் |
| (iv) முதல் கணக்கு | 4. பதிவுறா பொறுப்பு |

(a)

| (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |

(b)

| (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|
| 3 | 2 | 4 | 1 |

(c)

| (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|
| 4 | 3 | 2 | 1 |

(d)

| (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|
| 3 | 1 | 4 | 2 |

9) பாலாஜி மற்றும் கமலேஷ் கூட்டாளிகள். இலாப நட்டங்களை 2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொண்டனர். அவர்கள் யோகேஷ் என்பவரை கூட்டாண்மையில் சேர்த்துக் கொண்டனர். பாலாஜி, கமலேஷ் மற்றும் யோகேஷின் புதிய இலாப பகிர்வு விகிதம் 3:1:1. பாலாஜி மற்றும் கமலேஷின் தியாக விகிதத்தைக் கணக்கிடவும்.

(a) 1:3 (b) 3:1 (c) 2:1 (d) 1:2

10) விலகும் கூட்டாளிக்குரிய தீர்வுத்தொகை உடனடியாக செலுத்தாதபோது, அது மாற்றப்படும் கணக்கு

(a) வங்கி க/கு (b) விலகும் கூட்டாளியின் முதல் க/கு (c) விலகும் கூட்டாளியின் கடன் க/கு
(d) பிற கூட்டாளிகளின் முதல் க/கு

11) A, B மற்றும் C என்ற கூட்டாளிகள் 4:2:3 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தை பகிர்ந்து வந்தனர். தற்போது C விலகுகிறார். A மற்றும் B யின் புதிய இலாபப் பகிர்வு விகிதம்.

(a) 4:3 (b) 3:4 (c) 2:1 (d) 1:2

12) சரியான குறியீட்டைப் பயன்படுத்தி பொருத்தமான இணையை தேர்ந்தெடுக்கவும்

| | |
|---|---|
| (A) குறை ஒப்பம் | (i) முன்கூட்டிச் செலுத்திய அழைப்பு பணம் |
| (B) மிகை ஒப்பம் | (ii) வெளியிட்ட பங்குகளை விட அதிகமாக ஒப்பப்பட்டது |
| (C)அழைப்பு நிலுவை | (iii) வெளியிட்ட பங்குகளை விட குறைவாக ஒப்பப்பட்டது |
| (D) அழைப்பு முன்பணம் | (iv) செலுத்தப்பெறாத அழைப்பு பணம் |

(a)

| (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|
| (i) | (ii) | (iii) | (iv) |

(b)

| (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|
| (iv) | (iii) | (ii) | (i) |

(c)

| (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|
| (iii) | (ii) | (iv) | (i) |

(d)

| (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|
| (iii) | (iv) | (i) | (ii) |

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

13) ரூ.8 செலுத்தப்பட்ட, ரூ.10 மதிப்புள்ள பங்கு ஒறுப்பிழப்பு செய்யப்பட்டது எனில், அதன் குறைந்த அளவு மறுவெளியீட்டு விலை

(a) பங்கொன்று ரூ.10 (b) பங்கொன்று ரூ.8 (c) பங்கொன்று ரூ.5 (d) பங்கொன்று ரூ.2

14) பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது அல்ல?

(a) நிதிநிலை அறிக்கையின் குறைபாடுகள் அனைத்தும் நிதிநிலை அறிக்கைகள் பகுப்பாய்விற்கும் பொருந்தும்.

(b) நிதிநிலை அறிக்கை பகுப்பாப்பாய்வு ஒரு வழிமுறை, இது ஒரு முடிவல்ல.

(c) நிதி நிலை அறிக்கை பகுப்பாப்பாய்விற்கு நிபுணத்துவம் தேவையில்லை

(d) ஆய்வு செய்யப்பட்ட தகவல்களை உய்த்துணர்வது தனிப்பட்ட கருத்துகளை உள்ளடக்கியதாகும்.

15) ஒரு வரையறு நிறுமத்தின் விற்பனை ரூ.1,25,000 லிருந்து ரூ.1,50,000க்கு அதிகரித்துள்ளது. இது ஒப்பீட்டு வருமான அறிக்கையில் எவ்வாறு தோன்றுகிறது?

(a) +20% (b) +120% (c) -120% (d) -20%

16) ஒரு நிறுமத்தின் நீர்மைத்தன்மையை சோதிக்க கீழ்க்கண்ட எந்த விகிதங்கள் பயன்படுகிறது?
(i) விரைவு விகிதம்
(ii) நிகர இலாப விகிதம்
(iii) புற அக பொறுப்புகள் விகிதம்
(iv) நடப்பு விகிதம்
கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

(a) (i) மற்றும் (ii) (b) (i) மற்றும் (iv) (c) (ii) மற்றும் (iii) (d) (ii) மற்றும் (iv)

17) மொத்த விற்பனை ரூ.2,00,000 ஆக உள்ள போது ரொக்க விற்பனை ரூ.65,000 எனில் கடன் விற்பனை ரூ_______ ஆகும்.

(a) ரூ.2,65,000 (b) ரூ.1.35.000 (c) ரூ.65,000 (d) ரூ.2.00.000

18) Tally- யின் நுழை வாயிலிலிருந்து இருப்பாய்வை பார்வையிட எந்த விருப்பத்தேர்வு பயன்படும்?

(a) Gateway of Tally - > Reports - > Trial Balance (b) Gateway of Tally - > Trial Balance

(c) Gateway of Tally - > Reports - > Display - > Trial Balance (d) இவைகளில் ஏதுமில்லை

19) Tally-யில் முன்பே வரையறுக்கப்பட்ட பேரேடு(கள்) ?
(i) ரொக்கம்
(ii) இலாப நட்டக் க/கு
(iii) முதல் க/க

(a) (i) மட்டும் (b) (ii) மட்டும் (c) (i) மற்றும் (ii) இவை இரண்டும்

(d) (ii) மற்றும் (iii) இவை இரண்டும்

20) சொத்துகளைப் பராமரிக்கவும் மற்றும் சம்பளம் கொடுக்கவும் பெறப்படும் மானியமானது எவ்வாறு கருதப்படுகிறது?

(a) முதலின வரவு (b) வருவாயின வரவு (c) முதலினச் செலவு (d) வருவாயினச் செலவு

## பகுதி - II

7 x 2 = 14

**ஏழு** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். **வினா எண் 30 க்கு** கட்டாயம் விடையளிக்கவும்.

21) இரட்டைப்பதிவு முறை பின்பற்றாத போது சிறிய அளவிலான தனிவணிகர் பொதுவாக பராமரித்து வரும் கணக்குகளைத் தருக.

22) இலாப நோக்கற்ற அமைப்பின் வருவாயின வரவுகளில் ஏதேனும் நான்கினைத் தரவும்

23) மணி என்ற கூட்டாளி 2018, செப்டம்பர் 1 அன்று ரூ.30,000 எடுத்துக்கொண்டார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 6% என கணக்கிடப்பட வேண்டும். 2018, டிசம்பர் 31 அன்று எடுப்புகள் மீது வட்டி கணக்கிட்டு அதற்குரிய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

24) கூட்டாண்மை நிறுவனத்தில் நற்பெயரை மதிப்பிடும் ஏதேனும் இரண்டு சூழ்நிலைகளைத் தரவும்.

25) விமல் மற்றும் ஆதி என்ற இரு கூட்டாளிகள் 2:1 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர். அவர்கள் ஜெயம் என்பவரை 1/4 பங்குக்கு கூட்டாளியாகச் சேர்த்தனர். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடவும்.

26) சராசரி இலாபம் ரூ.15,000 ஆக இருக்கும்போது 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

27) கூட்டாளி விலகல் என்றால் என்ன?

28) கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆனந்த் கட்டுமான நிறுமத்தின் தகவல்களிலிருந்து, விரைவு விகிதத்தைக் கணக்கிடவும்.

| விவரம் | ரூ |
|---|---|
| மொத்த நடப்புப் பொறுப்புகள் | 1,00,000 |
| மொத்த நடப்புச் சொத்துகள் | 2,50,000 |
| சரக்கிருப்பு | 50,000 |
| முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் | 15,000 |

29) ஏதேனும் ஐந்து கணக்கியல் அறிக்கைகள் கூறு.

www.Padasalai.Net

30) அருள் நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து ஒப்பீட்டு வருமான அறிக்கையைத் தயாரிக்கவும்.

| விவரம் | 2015-16 ரூ. | 2016-17 ரூ. |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 50,000 | 60,000 |
| இதர வருமானம் | 10,000 | 30,000 |
| செலவுகள் | 40,000 | 50,000 |

## பகுதி - III

7 x 3 = 21

**ஏழு** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். **வினா எண் 40 க்கு** கட்டாயம் விடையளிக்கவும்.

31) பின்வரும் விவரங்களைக் கொண்டு அவ்வாண்டின் மொத்த விற்பனையை கண்டறியவும்:

| விவரம் | ரூ. |
|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | 50,000 |
| அவ்வாண்டில் கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 1,50,000 |
| உள்திருப்பம் | 15,000 |
| வாராக்கடன் | 5,000 |
| 2019, மார்ச் 31 அன்று கடனாளிகள் | 70,000 |
| ரொக்க விற்பனை | 1,40,000 |

32) அகமது மற்றும் பஷீர் வழங்கிய முதல் முறையே ரூ.60,000 மற்றும் ரூ.40,000. அவர்களின் இலாபப் பகிர்வு விகிதம் 2:1. அவ்வாண்டின் முதல் மீது வட்டி கணக்கிடுவதற்கு முன் இலாபம் ரூ.5,000. பின்வரும் நிலைகளில் முதல் மீதான வட்டித் தொகையைக் கணக்கிடவும்.
(i) முதல்மீது வட்டி குறித்து கூட்டாண்மை ஒப்பாவணத்தில் ஏதும் குறிப்பிடாத போது
(ii) கூட்டாண்மை ஒப்பாவணத்தின் படி, முதல்மீது வட்டி ஆண்டுக்கு 4% அனுமதிக்கப் படும்போது
(iii) கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி முதல்மீது வட்டி ஆண்டுக்கு 6% அனுமதிக்கும்போது

33) கூட்டாளி சேர்ப்பின் போது மேற்கொள்ள வேண்டிய சரிகட்டுதல்கள் யாவை?

34) கூட்டாண்மை அடிப்படையில் நடத்தப்படும் ஒரு வணிகத்தின் விவரங்கள் பின்வருமாறு:
(i) ஈட்டிய இலாபங்கள்: 2016: ரூ.25,000; 2017: ரூ.23,000 மற்றும் 2018: ரூ.26,000.
(ii) 2016 ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ரூ.2,500 சேர்ந்துள்ளது.
(iii) சரக்கிருப்பு தீயினால் சேதமடைந்ததால் 2017 ஆம் ஆண்டின் இலாபத்தில் ரூ.3,500 குறைக்கப்பட்டது.
(iv) சரக்கிருப்பு காப்பீடு செய்யப்படவில்லை. ஆனால் எதிர்காலத்தில் காப்பீடு செய்வதென முடிவு செய்யப்பட்டது. அதற்கான காப்பீட்டுக் கட்டணம் ஆண்டுக்கு ரூ.250 என மதிப்பிடப்பட்டது.
3 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

35) சாம் நிறுவனத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து பொது அளவு வருமான அறிக்கையை தயார் செய்யவும்.

| விவரம் | 2015-16 ரூ. | 2016-17 ரூ. |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 4,00,000 | 5,00,000 |
| இதர வருமானம் | 80,000 | 50,000 |
| செலவுகள் | 2,40,000 | 2,50,000 |
| வருமான வரி | 30% | 30% |

36) பின்வரும் தகவல்களிலிருந்து புற அக பொறுப்பு விகிதத்தினைக் கணக்கிடவும்.

| விவரம் | தொகை ரூ. |
|---|---|
| I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | |
| 1. பங்குதாரர் நிதி | |
| (அ) பங்கு முதல் | |
| நேர்மைப் பங்கு முதல் | 6,00,000 |
| (ஆ) காப்பு மற்றும் மிகுதி | 2,00,000 |
| 2. நீண்டகால பொறுப்புகள் | |
| நீண்டகால கடன்கள் (கடனீட்டுப் பத்திரங்கள்) | 6,00,000 |
| 3. நடப்புப் பொறுப்புகள் | |
| (அ) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள் | 1,60,000 |
| (ஆ) இதர நடப்புப் பொறுப்புகள் | |
| கொடுபட வேண்டிய செலவுகள் | 40,000 |
| மொத்தம் | 16,00,000 |

2019, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு (வருவிய)

37) Tally.ERP 9-ல் பொதுவாக பயன்படுத்தப்படும் சான்றாவணங்களின் வகைகளை குறிப்பிடவும்.

38) ஒரு மன்றத்திற்கு தொடர்புடைய பின்வரும் விவரங்களிலிருந்து 2018 ஆம் ஆண்டில் சந்தா மூலம் பெறும் வருவாயைக் கணக்கிடவும்.

| விவரம் | 1.1.2018 ரூ | 31.12.2018 ரூ |
|---|---|---|
| சந்தா பெறவேண்டியது | 3,000 | 5,000 |
| முன்கூட்டிப்பெற்ற சந்தா | 4,000 | 7,000 |

2018 ஆம் ஆண்டில் சந்தா பெற்றது: ரூ.45,000

39) பின்வரும் விவரங்களிலிருந்து விடுபட்ட தகவலைக் காணவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| 31.3.2018 அன்று இறுதி முதல் | 80,000 |
| அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல் | 30,000 |
| அவ்வாண்டில் எடுப்புகள் | 15,000 |
| 01.4.2017 அன்று தொடக்க முதல் | ? |
| 31.3.2018 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டில் நட்டம் | 25,000 |

40) சாரா நிறுமம் பங்கொன்று ரூ10 வீதம் 10,000 நேர்மைப் பங்குகளை விண்ணப்பத்தின்போது முழுத்தொகையும் செலுத்தும் வகையில் வெளியிட்டது. கீழ்க்கண்ட நிலைகளில் குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும்.

(i) பங்குகளை முகமதிப்பில் வெளியிட்டால்

(ii) பங்கொன்று ரூ.2 முனைமத்தில் வெளியிட்டால்

## பகுதி - IV

7 x 5 = 35

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

41) a) ஆனந்த் தன் கணக்கேடுகளை இரட்டைப்பதிவு முறையில் பராமரித்து வருவதில்லை. 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

| விவரம் | 31.3.2018 ரூ. | 31.3.2019 ரூ. |
|---|---|---|
| வங்கி ரொக்கம் | 5,000 (ப.) | 60,000 (வ.) |
| கைரொக்கம் | 3,000 | 4,500 |
| சரக்கிருப்பு | 35,000 | 45,000 |
| பற்பல கடனாளிகள் | 1,00,000 | 90,000 |
| பொறி மற்றும் இயந்திரம் | 80,000 | 80,000 |
| நிலம் மற்றும் கட்டடங்கள் | 1,40,000 | 1,40,000 |
| பற்பல கடனீந்தோர் | 1,70,000 | 1,30,000 |

ஆனந்த் தனது சொந்த பயனுக்காக ரூ. 60,000 எடுத்துக் கொண்டார். அவர் தன்னுடைய வியாபாரத்தை விரிவுபடுத்துவதற்காக ரூ. 17,000 கூடுதல் முதல் கொண்டு வந்தார். கடனாளிகள் மீது 5% ஒதுக்கு உருவாக்கவும். பொறி மற்றும் இயந்திரம் மீது 10% தேய்மானம் நீக்கவும்.

**(OR)**

b) கீழ்க்காணும் தகவல்களிலிருந்து கடலூர் கபடி மன்றத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.

| விவரம் | ரூ | விவரம் | ரூ |
|---|---|---|---|
| ரொக்க இருப்பு (1.4.2018) | 11,000 | வட்டி மற்றும் வங்கிக் கட்டணம் | 250 |
| வங்கி மேல்வரைப்பற்று இருப்பு (1.4.2018) | 20,000 | இதர வருமானம் | 350 |
| எழுதுபொருள் வாங்கியது | 5,200 | மைதானம் பராமரிப்பு | 550 |
| பயணச் செலவுகள் | 1,800 | அரசிடமிருந்து பெற்ற மானியம் | 12,000 |
| பங்காதாயம் பெற்றது | 3,000 | தொலைபேசிக் கட்டணம் செலுத்தியது | 2,800 |
| பொதுச் செலவுகள் | 500 | அறக்கட்டளை நிதி பெற்றது | 10,000 |
| சேர்க்கைக் கட்டணம் | 4,000 | காப்பீட்டு முனைமம் செலுத்தியது | 2,000 |
| தூது அஞ்சல் செலவுகள் | 2,000 | மின்கட்டணம் செலுத்தியது | 5,000 |
| நகராட்சி வரி செலுத்தியது | 3,000 | ரொக்க இருப்பு (31.3.2019) | 1,750 |

www.Padasalai.Net

42) a) கீழ்க்காணும் திருச்சி மனமகிழ் மன்றத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கினைத் தயாரிக்கவும்.

| பெறுதல்கள் | ரூ | செலுத்தல்கள் | ரூ |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு | | அறைகலன் வாங்கியது | 10,000 |
| கைரொக்கம் | 11,000 | வாடகை | 2,800 |
| பங்காதாயம் பெற்றது | 27,600 | செயலர் மதிப்பூதியம் | 15,000 |
| பழைய செய்தித்தாள் விற்றது | 3,000 | தபால் செலவுகள் | 1,700 |
| உறுப்பினர் சந்தா | 31,000 | பொதுச் செலவுகள் | 4,350 |
| பாதுகாப்பு பெட்டக வாடகை | 8,000 | அச்சு மற்றும் எழுதுபொருள்கள் | 45,000 |
| முதலீடுகள் மீதான வட்டி | 1,250 | தணிக்கைக் கட்டணம் | 5,000 |
| அறைகலன் விற்றது | 5,000 | இறுதி இருப்பு | |
| (ஏட்டு மதிப்பு ரூ4,400) | | கைரொக்கம் | 3,000 |
| | 86,850 | | 86,850 |

(OR)

b) டெரிக்ஸ்டன் நிறுமத்தின் பின்வரும் இலாப நட்ட அறிக்கையிலிருந்து
(i) மொத்த இலாப விகிதம்
(ii) நிகர இலாப விகிதம் கணக்கிடவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| I. விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் | 24,00,000 |
| II. இதர வருமானம்: | |
| முதலீடுகளிலிருந்து பெற்ற வருமானம் | 70,000 |
| III.மொத்த வருவாய் (I+II) | 24,70,000 |
| IV. செலவுகள்: | |
| கொள்முதல் செய்த சரக்குகள் | 18,80,000 |
| சரக்கிருப்பு மாற்றம் | (–)80,000 |
| பணியாளர் நலன்களுக்கான செலவுகள் | 2,90,000 |
| இதர செலவுகள் | 1,10,000 |
| வரி ஒதுக்கு | 30,000 |
| மொத்த செலவுகள் | 22,30,000 |
| V. அவ்வாண்டின் இலாபம் | 2,40,000 |

டெரிக்ஸ்டன் நிறுமத்தின் இலாப நட்ட அறிக்கை

43) a) ரிச்சர்ட் மற்றும் ரிஸ்வான், 2018, ஜனவரி 1 அன்று முறையே ரூ.3,00,000 மற்றும் ரூ.2,00,000 முதலாகக் கொண்டு தொழில் தொடங்கினர்.
கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி,
(அ) முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6% தரப்பட வேண்டும்.
(ஆ) ரிஸ்வான் ஆண்டுக்கு ரூ.50,000 ஊதியம் பெற வேண்டும்.
(இ) முதல் மீது வட்டி மற்றும் ரிஸ்வானின் ஊதியத்தை கழித்த பின், கழிவுக்குப் பின் உள்ள இலாபத்தில் 10% ரிச்சர்ட் கழிவாகப் பெற வேண்டும்.
(ஈ) இரு கூட்டாளிகளுக்கு இடையேயான இலாபப் பகிர்வு விகிதம் 3:2.
அவ்வாண்டில் நிறுவனம் ஈட்டிய இலாபம் ரூ.3,00,000.
நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் - 31 இல் கணக்கு முடிக்கிறது எனக் கொண்டு இலாபநட்டப் பகிர்வு கணக்கை தயாரிக்கவும்.

(OR)

b) பின்வரும் தகவல்களிலிருந்து, அனு நிறுமத்தின் போக்கு சதவிகிதங்களை கணக்கிடவும்.

| விவரம் | ரூ. (ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|
| | முதலாம் ஆண்டு | இரண்டாம் ஆண்டு | மூன்றாம் ஆண்டு |
| I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | | | |
| பங்குதாரர் நிதி | 500 | 550 | 600 |
| நீண்டகாலப் பொறுப்புகள் | 200 | 250 | 240 |
| நடப்புப் பொறுப்புகள் | 100 | 80 | 120 |
| மொத்தம் | 800 | 880 | 960 |
| II. சொத்துகள் | | | |
| நீண்டகாலச் சொத்துகள் | 600 | 720 | 780 |
| நடப்புச் சொத்துகள் | 200 | 160 | 180 |
| மொத்தம் | 800 | 880 | 960 |

44) a) தியாக விகிதத்திற்கும் ஆதாய விகிதத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?

(OR)

b) ஜாய் நிறுமம் ரூ.10 மதிப்புள்ள 10,000 நேர்மைப் பங்குகளை விண்ணப்பத்தின் போது ரூ.5, ஒதுக்கீட்டின் போது ரூ.3, முதல் மற்றும் இறுதி அழைப்பின் போது ரூ.2 செலுத்தும் வகையில் வெளியிட்டது. 9,000 பங்குகளை வாங்க பொதுமக்கள் விண்ணப்பித்தனர். இயக்குனர்கள் 9,000 பங்குகளையும் ஒதுக்கீடு செய்து அதற்கான தொகையையும் பெற்றுக் கொண்டனர். தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

45) a) கூட்டாண்மை அடிப்படையில் நடத்தப்படும் ஒரு வணிகத்தின் விவரங்கள் பின்வருமாறு:
(அ) ஈட்டிய இலாபங்கள் : 2016: ரூ.30,000; 2017: ரூ.29,000 மற்றும் 2018: ரூ.32,000.
(ஆ) 2016 ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ரூ.3,000 சேர்ந்துள்ளது.
(இ) சரக்கிருப்பு தீயினால் சேதமடைந்ததால் 2017 ஆம் ஆண்டின் இலாபத்தில் ரூ.2,000 குறைக்கப்பட்டது.
(ஈ) சரக்கிருப்பு காப்பீடு செய்யப்படவில்லை. ஆனால், எதிர்காலத்தில் காப்பீடு செய்வதென முடிவு செய்யப்பட்டது. அதற்கான காப்பீட்டுக் கட்டணம் ஆண்டுக்கு ரூ.5,600 என மதிப்பிடப்பட்டது.
3 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

(OR)

b) ரம்யா, சாரா மற்றும் தாரா என்ற கூட்டாளிகள் முறையே 5:3:2 எனும் விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். 2018, ஏப்ரல் 1 அன்று தாரா கூட்டாண்மையிலிருந்து விலகினார். பின்வரும் சரிக்கட்டுதல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
i) வளாகத்தின் மதிப்பை ரூ. 40,000 உயர்த்த வேண்டும்
ii) சரக்கிருப்பு ரூ.3,000, இயந்திரம் ரூ. 6,500 மதிப்பு குறைக்க வேண்டும்.
iii) கொடுபடாச் செலவுகள் ரூ. 500 ஒதுக்கு உருவாக்க வேண்டும்.
குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக் கணக்கு தயாரிக்கவும்.

46) a) சந்திரா நிறுமத்தின் பின்வரும் இருப்புநிலைக்குறிப்பிலிருந்து 2016 மார்ச் 31 மற்றும் 2017 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய ஒப்பீட்டு இருப்புநிலைக்குறிப்பினைத் தயார் செய்யவும்.

| விவரம் | 2016, மார்ச் 31<br>ரூ. | 2017, மார்ச் 31<br>ரூ. |
|---|---|---|
| I.பங்குமூலதனம் மற்றும்பொறுப்புகள் | | |
| பங்குதாரர் நிதி | 1,00,000 | 2,60,000 |
| நீண்ட காலப் பொறுப்புகள் | 50,000 | 60,000 |
| நடப்புப் பொறுப்புகள் | 25,000 | 30,000 |
| மொத்தம் | 1,75,000 | 3,50,000 |
| II. சொத்துகள் | | |
| நிலைச் சொத்துகள் | 1,00,000 | 2,00,000 |
| நடப்புச் சொத்துகள் | 75,000 | 1,50,000 |
| மொத்தம் | 1,75,000 | 3,50,000 |

(OR)

b) ரொவினா நிறுமத்தின் பின்வரும் வியாபார நடவடிக்கைகளிலிருந்து
(i) மொத்த இலாப விகிதம்
(ii) நிகர இலாப விகிதம்

| விவரம் | ரூ. |
|---|---|
| I. விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் | 4,00,000 |
| II. இதர வருமானம்: | |
| முதலீடுகளிலிருந்து பெற்ற வருமானம் | 4,000 |
| III. மொத்த வருவாய் (I+II) | 4,04,000 |
| IV. செலவுகள்: | |
| கொள்முதல் செய்த சரக்குகள் | 2,10,000 |
| சரக்கிருப்பு மாற்றம் | 30,000 |
| நிதிசார் செலவுகள் | 24,000 |
| இதர செலவுகள் (நிர்வாக மற்றும் விற்பனை) | 60,000 |
| மொத்த செலவுகள் | 3,24,000 |
| V. வரிக்கு முன்னர் உள்ள இலாபம் (III - IV) | 80,000 |

இலாப நட்ட அறிக்கை

47) a) கணினிமயக் கணக்கியல் முறையின் பயன்பாடுகளில் ஏதேனும் ஐந்தினை விளக்கவும்.

(OR)

b) X நிறுமம் ரூ.10 மதிப்புள்ள 10,000 நேர்மைப் பங்குகளை வெளியீடு செய்தது. பங்குகள் மீதான பணம் செலுத்த வேண்டிய விவரங்கள் பின்வருமாறு:
விண்ணப்பத்தின் போது ரூ.2
ஒதுக்கீட்டின் போது ரூ.4
முதல் அழைப்பின் போது ரூ.2
இறுதி அழைப்பின் போது ரூ.2
30,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பெறப்பட்டன. 10,000 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பப்பட்டன. மீதமுள்ள விண்ணப்பங்கள் விகிதச்சார அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மிகுதியாகப் பெற்ற விண்ணப்பத் தொகையை ஒதுக்கீட்டிற்கு பயன்படுத்தி கொள்ளப்பட்டது. இயக்குனர்கள் இரண்டு அழைப்புகளையும் மேற்கொண்டனர். 600 பங்குகளின் இரண்டாம் அழைப்புத் தொகையை தவிர அனைத்து தொகைகளும் பெறப்பட்டன. பின்னர் அப்பங்கப்பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன. அவற்றில், 400 பங்குகள் ஒரு பங்கிற்கு ரூ.7 பெற்றுக் கொண்டு, முழுமையாக செலுத்திய பங்காக மறுவெளியீடு செய்யபட்டன. குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும்.

******************************************

www.Padasalai.Net